1979 மார்ச் 19]

(ஆ) ஏற்கனவே ஆரம்ப சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : (அ) செங்கோட்டை தாலூகா, எலத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடமும், அலுவலர் குடியிருப்புக் கட்டிடம் இன்னும் கட்டப் படவில்லை.

(ஆ) ஆம். ஆனால் 23-6-78-ம் தேதி முதல் எலத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் குடும்பநல மையத்திற்காக புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(இ) செங்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், எலத்தூர், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் கிடைக்கப்பெற்று, பங்குத் தொகையான ரூ.10,000ஐ ஊராட்சி ஒன்றிய கருவூலத்தில் செலுத்தியுள்ளார். திருநெல்வேலி மாவட்ட சுகாதார அதிகாரி, நிலம் கிடைத்ததற்கான ஒப்பாவணமும், பங்குத் தொகையை அரசு கருவூலத்தில் செலுத்தப்பட்ட விபரங்களை அனுப்புமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையரைக் கேட்டுக் கொண்டுள்ளார். அந்த நிலம் அரசுக்கு ஒப்படைக்கப்பட்டு பங்குத் தொகையை அரசு கருவூலத்தில் செலுத்தப்பட்டபின் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர் மேற்கொண்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்.

சொக்கம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம்

* வினா எண் 474— திரு. எம். எம். ஏ. ரசாக்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசித் தாலூகா சொக்கம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் கட்டி முடிக்கப்பட்டு நான்கு ஆண்டுகாலமாகியும் திறக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அதனை விரைவில் திறப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : (அ) 12-10-77 முதல் ஆரம்ப சுகாதார நிலையம் புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) வினா எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம நீட்டிக்கப்படுகிறது.